Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 06 (22-08-1993) ஞாயிற்றுக்கிழமை ஓசை 185

## இலிகிதர் சுருக்கெழுத்தாளர் 24 இல் நேர்முகப் பரீட்சை

இலிகிதர்கள், தமிழ் சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர் பதவிகளைநிரப்புவதற்காக அண்மையில் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்கு வரும் 24-ம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் யாழ். செயலகத்தில் நேர்முகப்பரீட்சைநடைபெறவுள்ளது. இவர்களுக்கான கடிதங்கள் தபால்மூலம் ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன. நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்கள்தத்தமது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களுடன் மாவட்ட பிரதி ஆணையாளர் அலுவலகத்துக்கு சமுகம் அளிக்கும்படி யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் அறிவித்துள்ளார். பரீட்சார்த்திகள், கேட்கப்பட்டுள்ளசான்றிதழ்களின் மூலப் பிரதியையும் அவற்றின் ஒளிப்படப்பிரதியையும் தவறாது கொண்டுவரவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

(3ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ நீதிமன்றம் நேற்று திறந்துவைப்பு; வழக்கு விசாரணைகள் உடன் ஆரம்பமாயின



தமிழீழத்தின் முதலாவது மாவட்ட நீதிமன்றத்தினை நேற்று சுன்னாகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் திறந்து வைப்பதனையும், அருகே நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. பரா, காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

[யாழ்ப்பாணம்]

தமிழீழத்தின் முதலாவது மாவட்ட நீதிமன்றத்தை நேற்றுக்காலை 10.00 மணியளவில் அரசியற் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். சுண்ணாகத்தில் திறந்துவைக்கப்பட்ட இந் நீதிமன்ற திறப்புவிழா நிகழ்ச்சியில், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள், வெளிநாட்டுசெய்தியாளர்கள் உட்பட பெருந்திரளான மக்களும் கலந்துகொண்டனர்.

தமிழீழக் காவல்துறையினரின் வாத்திய அணியின் இசை முழங்க, இத்திறப்பு விழா நிகழ்ச்சி இடம் பெற்றது. இத்திறப்பு விழா நிகழ்ச்சியின் போது தமிழீழக் காவல்துறை பொறுப்பாளர் திரு. நடேசன் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார், மங்கள விளக்கை யாழ். மாவட்ட தளபதி அன்பு ஏற்றிவைத்தார், அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நாடாவை வெட்டி நீதிமன்றத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

நீதிமன்றம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்ட பின்னர் நீதிநிர்வாகப்பொறுப்பாளர் பரா விழாவிற்கு வருகை தந்திருந்த விருந்தினர்களை நீதிமன்றத்தினுள் அழைத்துச்சென்றார். இவ்விழாவில் மேலும் அரசியற் துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன், யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, நிதர்சனம் பொறுப்பாளர் ஜவான், செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி மற்றும் விடுதலைப்புலிகள் உறுப்பினர் பலரும் கலந்து கொண்டனர்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட நீதி மன்றின் நீதியாளர்களான திரு. க. தேசிகன், திரு. ச. பூவேந்தன், திரு.சி.ஒப்பிலான் ஆகியோர் கடமை யேற்றுக் கொண்டனர். இதனை அடுத்து வழக்கு விசாரணை ஒன்றின் மூலம் நீதிமன்றின் பணிகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.


## நீதிமன்றச் செயற்பாடுகள் பற்றி பொறுப்பாளர் பரா விளக்கம்

### மேல்முறையீட்டு மன்றம் விரைவில் அமையும்

''தமிழீழ நீதிமன்றம் இன்று வலிகாமம் கோட்டத்தில் அமைக்கப்பட்டதை யடுத்து, எமது நீதிநிர்வாகப் பிரிவினரால் தென்மராட்சியில், சாவகச்சேரியிலும், அதனைத் தொடர்ந்து வடமராட்சியிலும், யாழ். நகரப்பகுதியிலும் நீதிமன்றங்கள் அமைக்கப்படும். கருதும் வழக்காளி மேன்முறையீடு செய்யவும் முடியும். இதற்கான மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன என்றார்.

நீதிமன்றின் செயற்பாடுகள் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

''வலிகாமத்தில் அநேகமான சட்டத்தரணிகள் இந் நீதிமன்றில் வாதிடுவதற்கு சத்தியப்பிரமாணம் எடுத்துள்ளனர். மக்கள் சட்டவாளர்களை தெரிவுசெய்யலாம். சட்டவாளர்களுக்கு ஒரு வழக்குக்குரிய கட்டணமாக நூற்றி ஐம்பது ரூபா மாத்திரமே வழங்க முடியும். இதை விட குறைவான கட்டணத்தைசட்டவாளர்கள் பெறலாம். ஆனால் கூடுதலாக பெறமுடியாது அளிக்கப்படும் கட்டணம் நீதிமன்றிலேயேசெலுத்தப்படவேண்டும். நீதிமன்றம் சட்ட




தேசியக்கொடியை ஏற்றிவைத் தார், மங்கல விளக்கை யாழ். மாவட்ட தளபதி அன்பு ஏற்றி வைத்தார், அரசியற்துறைப்

பொறுப்பாளர் பரா விழாவிற்கு வருகை தந்திருந்த விருந்தினர் களை நீதிமன்றத்தினுள் அழைத்துச்சென்றார். இவ்

பொறுப்பாளர் செல்வி ஜனனி மற்றும் விடுதலைப்புலிகள் உறுப்பினர் பலரும் கலந்து கொண்டனர்.

ஒன்றின் மூலம் நீதிமன்றின் பணிகள் சம்பிரதாயபூர் வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டன.



தமிழீழத்தின் முதலாவது மாவட்ட நீதிமன்றத்தினை நேற்று சுன்னாகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் திறந்து வைப்பதனையும், அருகே நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. பரா, காவல்துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.



தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தின் முதலாவது அமர்வில் நீதியாளர்கள் திரு. ஒப்பிலான், திரு. பூவேந்தன், திரு. தேசிகன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# நீதிமன்றச் செயற்பாடுகள் பற்றி பொறுப்பாளர் பரா விளக்கம்

## மேல்முறையீட்டு மன்றம் விரைவில் அமையும்

''தமிழீழ நீதிமன்றம் இன்று வலிகாமம் கோட்டத்தில் அமைக்கப்பட்டதை யடுத்து, எமது நீதிநிர்வாகப் பிரிவின ரால் தென்மராட்சியில், சாவகச்சேரியிலும், அதனைத் தொடர்ந்து வடமராட்சியி லும், யாழ். நகரப்பகுதியிலும் நீதிமன்றங்கள் அமைக்கப்பட வுள்ளன என நேற்று நடை பெற்ற தமிழீழத்தின் முதலா வது நீதிமன்ற திறப்புவிழா வினையடுத்து பத்திரிகையாள ரைச் சந்தித்து உரையாடிய நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், ''இந் நீதிமன்றம் சுன் ணாகம், சங்கானை காவல் பணிமனைப் பிரதேச வழக்கு களையே தற்போது கையா ளும். நீதிமன்றங்கள் விஸ்தரிக் கப்படும்போது சகல பிரதேச ங்களிலும் கோட்ட ரீதியாக நீதிமன்றங்கள் அமையும்.''

'இந் நீதிமன்றமானது சனி, ஞாயிறு தவிர்ந்த வாரநாட்க ளில் மூன்று தினங்களில் சிவில் வழக்குகளையும், மற்றையஇரு தினங்களில் கிரிமினல் வழக்கு களையும் விசாரணைக்கு எடு த்துக் கொள்ளும் எனினும், சிவில் வழக்குகளை நேரடி யாக நீதிமன்றத்திலும், கிரி மினல் வழக்குகளை காவல் துறையினூடாகவும் மட்டுமே மாவட்ட நீதிமன்றில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்ப டும்வழக்கு தீர்ப்பு பிழையென கருதும் வழக்காளி மேன்முறை யீடு செய்யவும் முடியும். இதற் கான மேன்முறையீட்டு நீதி மன்றங்கள் விரைவில் அமைக் கப்படவுள்ளன என்றார்.

நீதிமன்றின் செயற்பாடுகள் பற்றி அவர் மேலும் தெரிவிக் கையில்,

''வலிகாமத்தில் அநேக மான சட்டத்தரணிகள் இந் நீதிமன்றில் வாதிடுவதற்கு சத்தியப்பிரமாணம் எடுத்துள் ளனர். மக்கள் சட்டவாளர் களை தெரிவுசெய்யலாம். சட் டவாளர்களுக்கு ஒரு வழக் குக்குரிய கட்டணமாக நூற்றி ஐம்பது ரூபா மாத்திரமே வழங்க முடியும். இதை விட குறைவான கட்டணத்தைசட் டவாளர்கள் பெறலாம். ஆனால் கூடுதலாக பெறமுடி யாது அளிக்கப்படும் கட்டணம் நீதிமன்றிலேயேசெலுத்தப்பட வேண்டும். நீதிமன்றம் சட்ட வாளர்களுக்குரிய கட்டணங் களை வழங்கும். மக்கள் விரும் பினால் தமக்காக தாமே வாதாடவும் வழி செய்யப்பட்

(3ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ நீதிமன்றத்தின் முதலாவது வழக்கு தீர்ப்பு

அனுமதியின்றி மதுபானம் உற்பத்தி செய்தமைக்காகவும் விற்பனை செய்தமைக்காகவும் கைது செய்யப்பட்ட இருவர் தொடர்பான வழக்கு தமிழீழ காவல்துறையினரால் நேற்று முதலாவது வழக்காக நீதிமன் றில் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி இரு குற்றவாளி களும் தங்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து தமிழீழ சட்டக் கோவை பிரிவு 14 இன் பிரகாரம் நீதிமன்றி னால் தலா ஐந்நூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மேற்படி தண்டப் பணத்தை கட்டுவதற்கு இவர்கள் தவணை கோரியதையடுத்து, எதிர் வரும் 23 ஆம் திகதி திங்...

(3ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற திறப்பில் வெளிநாட்டுச் செய்தியாளர்

நீதிமன்ற திறப்பு விழாவில் வெளிநாட்டுச் செய்தியாளர் களும் கலந்து கொண்டனர். பி. பி. சியின் கொழும்பு முக வர் சியாக்கா நூலேசாவும் மேற்படி திறப்பு விழா நிகழ்ச் சிகளை பதிவு செய்தலிலும், நீதிமன்ற நடவடிக்கைகளை பதிவு செய்தலிலும் ஈடுபட் டார்.

(11). (09)

## வீரச்சாவு



2-ம் லெப். நவனீதன் (குகதாஸ்)

மட்டக்களப்பு மாவட்டம் மிறாவோடையில் கடந்த 17-ம் திகதி இரவு 7 மணியள வில் விடுதலைப்புலிகள் போராளிகள் சென்றுகொண் டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற் பட்ட எதிர்பாராத மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவரும் முழுநேர ஆதரவா ளர் ஒருவரும் வீரச்சாவடைந் தனர்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப் டினன்ட் நவனீதன் / குகதாஸ் (பிள்ளையான் பதமநாதன், கிரான் மட்டக்களப்பு), முழு நேர ஆதரவாளர் கிருஷ்ண பிள்ளை ஜீவப்பிரியன் (கிண் ணியடி மட்டக்களப்பு) ஆகிய இருவருக்கும் தமிழீழ விடுத லைப்புலிகள் தமது வீரவணக் கத்தைத் தெரிவித்துக் கொள் கின்றனர்.

# யுத்தக் கைதிகளை பார்வையிட மதத்தலைவர்கள் குழு யாழ். வரும்?

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் வசமுள்ள 32 யுத்தக் கைதிகளையும் பார்வையிடுவ தற்காக மதத்தலைவர்கள் அடங்கிய குழு ஒன்று அடுத்த சில தினங்களுக்குள் யாழ்ப்பா ணம் புறப்படும் என தெரிய வருகிறது. இதற்கான அனு மதியை கூட்டுப்படைகளின் தலைமையகம் வழங்கி விட் டது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் இவர்கள் விமானம் மூலம் யாழ். புறப்படுவர் என கொழும்புபத்திரிகையொன்று தெரிவிக்கிறது.

வண. மாதம்பாகே அஸ்ஸஜி தேரோ தலைமையில் யாழ். வரும் மதத்தலைவர்கள்பொலி சாரின் விடுதலை குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த திட்டமிட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

### இலங்கை இனப்பிரச்சினை குறித்த ஐ. நா. உபகுழுவின் பிரேரணை கைவிடப்பட்டது

இலங்கை இனப்பிரச்சினை யில் ஐக்கிய நாடுகள் சபை தலையீடு செய்வதா? என்பது குறித்து பரிந்துரை செய்வ தற்கு ஜெனீவாவில் நேற்று முன்தினம் கூடிய ஐ. நா.வின் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் பாரபட்சம் தடுக்கும் துணைக் குழு இறுதிநேரத்தில் தனது பிரேரணையை ஆராயாது கைவிட்டுள்ளது.

இதற்கான பிரேரணை ஒன்றை அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம், நோர்வே ஆகிய நாடுகள் கூட்டாகக் கொண்டு வந்ததும் இதற்கான வாக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## படகுச்சேவை கலந்துரையாடல்

புலோப்பளை பயணிகள் படகுச் சேவையில் ஈடுபட் டுள்ள சகல படகு உரிமையா ளர்களையும், ஓட்டுநர்களை யும் இன்று காலை 9.00 மணி க்கு புலோப்பளை பயணிகள் படகுத்துறைச் செயலகத்திற்கு தவறாது வருகைதரும்படியும், வரும்போது படகுச் சேவை யில் பாவிக்கப்படும் வெளி இணைப்பு இயந்திரங்கள், மற்றும் சகல உபகரணங்களை யும் கொண்டு வரும் படியும் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# வெடி விபத்தில் 8போராளிகள் வீரச்சாவு

ஆனையிறவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் எதிர்பாராத விதமாக இடம்பெற்ற வெடி விபத்து ஒன்றில் எட்டு விடுத லைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

★ கப்டன்வண்ணன் [இராச நாயகம் சற்குணநாதன் காக் கையன்குளம், இரணை இலுப் பைக்குளம், வவுனியா]

★ லெப்டினன்ட் தமிழேந்தி/ இராஜன் [இரகுநாதன் விநாய மூர்த்தி கொந்தக்காரன்குளம், பாலமோட்டை, வவுனியா]

★ 2ஆம்லெப்டினன்ட் அருள் வாசன் / முகிலன் [வேலுப் பிள்ளை செல்வகுமார் விவே கானந்தநகர், கிளிநொச்சி]

★ 2ஆம்லெப்டினன்ட் வள்ளு வன் [இராமசாமி சண்முகரட் ணம் 3ம் கண்டம், முத்தையன் கட்டு. ஒட்டிசுட்டான்]

★ 2ஆம் லெப்டினன்ட் விநா யகன் [வடிவேல் தியாகராஜா சேனைப்பிலவு, நெடுங்கேணி]

★ 2 ஆம் லெப்டினன்ட் வீர மணி [செல்லத்துரை பார்த் திபன் கிரிசுட்டான், நெடுங் கேணி, முல்லைத்தீவு]

★ வீரவேங்கை சகாநாதன்/ ரவிநாத் [ஆறுமுகம் றங்கராஜ் அம்பாள்குளம், மாங்குளம்]

★ வீரவேங்கை தவரஞ்சன்

(3ஆம் பக்கம் பார்க்க)

# Jaffna College Institute of Technology

## VADDUKODDAI.

யாழ்ப்பாணத்திலும் வட்டுக்கோட்டையிலும்
முழுநேரப் பயிற்சிநெறிகள் ஆரம்பமாக உள்ளன.

### வட்டுக்கோட்டையில் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள்

1) Technician Diploma Courses
(ஆங்கில மொழி மூலம்)
(i) Civil Engineering & Quantity Surveying-
காலம் - 2 வருடங்கள்
(ii) Electronics & Telecommunication Engineering-
காலம் - 3 வருடங்கள்
(iii) Mechanical Engineering - காலம் - 3 வருடங்கள்
(iv) Electrical Engineering - காலம் - 3 வருடங்கள்
கல்வித்தகைமை :— G. C. E. (O/L) - கணிதம் - C, விஞ்ஞானம் - C, ஆங்கிலம் - S உட்பட 6 பாடங்களில் சித்தி.

2) Diploma Courses-
காலம்- ஒரு வருடம்
(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data Processing (BASIC, COBOL & d - BASE III+) Practical on I B M - PC AT & MAT 386 Industrial Controller
கல்வித்தகைமை:— G. C. E. (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி - காலம்- ஒரு வருடம்
(iii) Advanced Diploma in Computing (Syllabus includes British Computer Society & Australian Computer Society) கல்வித்தகைமை:—G.C.E.(O/L) கணிதம் - C, ஆங்கிலம் - S உடன் G.C.E.(A/L)-ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி- காலம்- ஒருவருடம்

3) Technician Certificate Course
(i) Radio & T. V. Servicing- காலம்- ஒரு வருடம்
கல்வித்தகைமை:— G.C.E.(O/L)-ல் கணிதம் -S, விஞ்ஞானம் - S.

4) Craft Certificate Course:-

### யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள்

1) Technician Diploma Courses
(ஆங்கில மொழி மூலம்)
(i) Civil Engineering & Quantity Surveying -
காலம்- இரண்டு வருடங்கள்
(ii) Electronics & Telecommunication Engineering
காலம்- மூன்று வருடங்கள்
(iii) Mechanical Engineering- காலம்- மூன்று வருடங்கள்
(iv) Electrical Engineering - காலம் மூன்று வருடங்கள்
கல்வித்தகைமை:— G.C.E.(O/L) கணிதம் - C, விஞ்ஞானம்- C, ஆங்கிலம்- S உட்பட 6 பாடங்களில் சித்தி.

2) Diploma Courses-
காலம்- ஒரு வருடம்
(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data processing (BASIC, COBOL & d BASE III + ) Practical on IBM-PC,AT & MAT 386 Industrial Controller
கல்வித்தகைமை:— G.C.E. (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி- காலம்- ஒரு வருடம்
(iii) Advanced Diploma in Computing
(Syllabus includes British Computer Society &

## வரி விளம்பரம்

### எலற்றிக் வெல்டர் தேவை

பிரபலியமான மோட்டார் திருத்தும் தொழிலகத்திற்கு அனுபவம் வாய்ந்த எலற்றிக் வெல்டர் தேவை. தகுதியுள்ளோர் நேரில் தொடர்பு கொள்ளவும். திருமணமாகாதவர் விரும்பத்தக்கது. மிகுதி நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தொடர்பு, துரைமோட்டார் உயிருட்டகம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (சி-7227)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இங்கிலாந்து தயாரிப்பு Oteley} Single demy Cylinder Machine விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு இல. 198, மே/பா. ஈழநாதம், 31மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (5713)

23 இஞ்சி பலாக்கட்டை மிருதங்கம் ஒன்று விற்பனைக்கு உண்டு உரிமையாளர், ம. அருளப்பு, 12/1. 3ஆம் குறுக்குத் தெரு, பாலையூர் யாழ்ப்பாணம். (5750)

### றேடியோ, மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்

வைண்டிங்கடிகாரங்கள் 90/- ஓட்டோமெற்றிக் கடிகாரங்கள் 125/- எலெக்ரோனிக்கடிகாரங்கள் 90/-, 150/- மேசை சுவர் மணிக்கூடுகள் 100—200 றேடியோ மட்டும் 150/-, கசற் றேடியோ 200/- இவை யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கபபடும். டில்காவாச் அன் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-7113)

### காணவில்லை

நீலநிற பேஸ் ஒன்று அடையாள அட்டையுடன் 19-08 93 அன்று நல்லூர் ஆலய முன்றலுக்கும் மங்கையர்க்கரசி பாடசாலைக்கும் இடையில் தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுப்போர் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (5752)

### மில்க்வைற் சலவைத் தூள்

காலம் பெறுமதியானது. துரித சலவைக்கும், தூய வெண்மைக்கும், துணியின் பிரகாசத்திற்கும் மில்க்வைற் சலவைத்தூள். 50 கிறாம் பக்கற் ரூபா 6/-, 450 கிறாம் பக்கற் ரூபா 45/- 450 கிறாம் பக்கற் கொண்ட பெட்டி (2 டசின்) ரூபா. 1000/-. சலவைத்தூள் வெற்றுப் பக்கற்றுகளுக்கு பரிசுகள் உண்டு. "மில்க்வைற்" (7232)

## முதற் பிரிவில் சித்தி

லண்டன் பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாண மாணவர் ஒருவர் மின் இலத்திரனியல் பொறியியலாளராக முதற் பிரிவில் சித்தியடைந்துள்ளார். புங்குடுதீவு 11-ம் வட்டாரம் ஓய்வு பெற்ற அதிபர் பொன் ஐயாத்துரை சிவகாமி - பதமலோஜினி தம்பதிகளின் புதல்வன் எஸ் பிறேம்ஜெயந்த் என்பவரே இவ்வாறு முதற் பிரிவில் சித்தியடைந்தவராவார். முதற் பிரிவில் சித்தியடைந்த ஒரேயொரு மாணவரான இவர் புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயம், மன்னார் புனித சவேரியார் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார்.

## நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)
1991 ஆம் ஆண்டில் நடைபெற்ற விசேட பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்டு 1992 ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற சகல அமைய எழுதுவினைஞர்களும் தமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்படுவார்கள் என்று அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளது.

இத் தகவலை யாழ். அரசாங்க அதிபர் திரு.கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.
(தி)

## நினைவு கூருகின்றோம்... 1993-08-22

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட வேலணை மேற்கைச் சேர்ந்த தமிழ்ப்

(ii) Computer Programming & Data Processing (BASIC, COBOL & d - BASE III+) Practical on I B M - PC AT & MAT 386 Industrial Controller
கல்வித்தகைமை:— G. C. E. (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி - காலம்- ஒரு வருடம்

(iii) Advanced Diploma in Computing (Syllabus includes British Computer Society & Australian Computer Society) கல்வித்தகைமை:—G.C.E.(O/L) கணிதம் - C, ஆங்கிலம் - S உடன் G.C.E.(A/L)-ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி- காலம்- ஒருவருடம்

## 3) Technician Certificate Course

(i) Radio & T. V. Servicing- காலம்- ஒரு வருடம்
கல்வித்தகைமை:— G.C.E.(O/L)-ல் கணிதம் -S, விஞ்ஞானம் - S.

## 4) Craft Certificate Course:-

(தமிழ்மொழி மூலம்)

(i) மின்னிணைப்பு பயிற்சி - காலம் ஒரு வருடம் (Electrical wiring & Installation Practice)
கல்வித்தகைமை: G.C.E.(O/L)வரைபடித்திருத்தல் வேண்டும்.

சித்தி.

## 2) Diploma Courses-

காலம் ஒரு வருடம்

(i) Draughtsmanship (Civil)

(ii) Computer Programming & Data processing (BASIC. COBOL & d BASE III + ) Practical on IBM-PC, AT & MAT 386 Industrial Controller .
கல்வித்தகைமை:— G.C.E. (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி- காலம்- ஒரு வருடம்

(iii) Advanced Diploma in Computing (Syllabus includes British Computer Society & Australian Computer Society)
கல்வித்தகைமை:— G.C.E (O/L) கணிதம் - C, ஆங்கிலம் - S உடன் G.C.E.(A/L)-ல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி- காலம்- ஒரு வருடம்.

### விசேட கவனத்திற்கு:—

- பிறநாட்டுப் பரீட்சைகளை எடுக்கத்தக்கதாக (4) தவிர்ந்த எல்லாப் பாடநெறிகளும் ஆங்கிலமொழி மூலமாக தமிழ் விளக்கத்துடன் நடாத்தப்படும். மேலும் இதற்குத் துணையாக பாட நெறிக்காலம் முழுவதும் ஆங்கில பாடம் கட்டாயமாக கற்பிக்கப்படும்.
- பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு போதிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படுமிடத்து உதவித்தொகை வழங்கப்படும்.
- நூலக வசதி உண்டு.
- விடுதி வசதி (ஆண்கள், பெண்கள்) உண்டு.
- விளையாட்டுத்துறை வசதிகள் உண்டு.

### முக்கிய குறிப்பு:-

- விண்ணப்பப்படிவம் விலை ரூபா 30-00
பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்:- (a) JCIT அலுவலகம் வட்டுக் கோட்டை. (b) JCIT, 182, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
- விண்ணப்பப்படிவங்களை 30-8-1993 காலை 10 மணிக்கு முன்னர் JCIT அலுவலகம் வட்டுக்கோட்டையில் கிடைக்கக்கூடியதாக தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.
- போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படும்.
- நேர்முகப்பரீட்சை 1-9 93, 2-9 93 ஆகிய நாட்களில் காலை 9 மணி முதல் JCIT அலுவலகம், வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

(சி / 7152)

**பணிப்பாளர்.**

வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-7113)

### காணவில்லை

நீலநிற பேஸ் ஒன்று அடையாள அட்டையுடன் 19-08 93 அன்று நல்லூர் ஆலய முன்றலுக்கும் மங்கையர்க்கரசி பாடசாலைக்கும் இடையில தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுப்போர் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (5752)

1991 ஆம் ஆண்டில் நடைபெற்ற விசேட பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்டு 1992 ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற சகல அமைய எழுதுவினைஞர்களும் தமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்படுவார்கள் என்று அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளது.

இத் தகவலை யாழ். அரசாங்க அதிபர் திரு.கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

(தி)

## நினைவு கூருகின்றோம்... 1993-08-22

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட வேலணை மேற்கைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1989ஆம் ஆண்டு மட்டு-வட்டமடுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**ரவி** (பொன்னையா விஜயராஜ்-தம்பிலுவில்-01-அம்பாறை)

திருமலை-மேன்காமம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**கப்டன் நடேஸ்** (இ. திலகரத்தினம்-தம்பலகமம்-திருமலை)
**மீசைராஜா** (குழந்தைவேல் ராஜா-கிளிவெட்டி-திருமலை)

1990ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.
**சசியன்** (அந்தோனிப்பிள்ளை ஜோன்-ஆறுமுகத்தான் குளம், குழுமுமுனை-மணலாறு)

ஊர்காவற்றுறையில் உலங்குவானூர்தி மூலம் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**லெப்.சாந்தன்** (சின்னத்துரை சிவலிங்கம்- 1-ம் வட்டாரம்-புங்குடுதீவு)
**நிசாந்தன்** (சுப்பிரமணியம் மாணிக்கம்-3-ம் வட்டாரம் - நெடுந்தீவு மேற்கு)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**சேனாதி** (செல்லக்கண்டு ஜெபச்சந்திரன் - சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி-யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட செங்கலடியைச்சேர்ந்த கூலித்தொழிலாளி மற்றும் ஆறுமுகத்தான் குடியிருப்பு வாசிஆகிய 02 தமிழர்கள்.

பூநகரி-சங்குப்பிட்டி, கோதீவு ஆகிய பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதல்களில் கொல்லப்பட்ட இளைஞர்கள் உட்பட 13 - தமிழர்கள்.

வவுனியாவிலிருந்து வந்துகொண்டிருந்த வாகனமொன்றின்மீது சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

காரைநகரில் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் பருத்தியடைப்பு, பாலாவோடை, சாந்திபுரம் பகுதிகளில் மேற்கொண்ட அட்டூழியங்களின்போது படுகொலை செய்யப்பட்ட மற்றும் அரைகுறையாக எரித்தநிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி, அவரது பேரன், பேர்த்தி ஆகியோர் உட்பட பலதமிழர்கள்,

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய,
**அமலன்** (தம்பிராசா சிவகணேஸ்-பாலையூற்று-திருமலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/7239)

[library stamp, illegible]

### சிந்தனைக்கு

தோலை உரிக்கும் முன்பே - உள்ளிருக்கும் சுளையை ஊகித்து விடலாம்.

- ஒலிவர். வி. ஹோல்ம்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

# உள்ளூராட்சி தேர்தல் அரசின் புதிய தந்திரம்

கிழக்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்தில் வவுனியா நகரப்பகுதியிலும் உள்ளூராட்சித்தேர்தல் நடத்தப்படவுள்ளதாக திடீர் அறிவிப்பொன்றை சிறிலங்கா அரசாங்கம் விடுத்துள்ளது. நேற்று முன் தினம் விடுக்கப்பட்ட இத்திடீர் அறிவிப்பானது கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் உட்பட பலருக்கு அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது.

இரு மாதங்களின் முன் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் ஏதும் நடத்துவதற்கான சூழ்நிலை சாதகமாக இல்லை என தெரிவித்திருந்த அரசாங்கம் திடீரென இத்தேர்தலுக்கு நாள் குறிப்பதாவது அரசிற்கு புதிதாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகளின் விளைவே என்பதில் சந்தேகமில்லை. ஆகையினால் அரசின் இத்தீர்மானமானது இனப்பிரச்சினையின் போக்கை திசைதிருப்பும் ஒரு நடவடிக்கை என்றே கூறவேண்டும்.

இலங்கையில் இடம் பெற்றுவரும் உள்நாட்டுப் போரிலும் இன ஒடுக்கல் நடவடிக்கையிலும் இன்று உலகின் கவனம் பெருமளவு திரும்பியுள்ளது. இந்தவகையில் இன்று உலகில் இடம் பெற்று வரும் சிக்கல் நிறைந்த பொஸ்னியா, சோமாலியா பிரச்சினைகள் வரிசையில் இலங்கை இனப்பிரச்சினையும் இடம் பெறும் கட்டத்தை எட்டியுள்ளது எனக் கூறலாம். இதனால் இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட்டாக வேண்டும் என்ற நிலை உலக அரங்கில் முனைப்பு பெற்றுவருகின்றது.

இதன் காரணமாகத்தான் இப்பிரச்சினையில் ஐ.நா.சபை தலையீடு பற்றிய பேச்சும் பல தரப்பில் இருந்தும் எழுப்பப்பட்டு வருகின்றது. ஐ. நா. சபையின் உப குழுக்களில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் பிரஸ்தாபிக்கப்படும் நிலை அடைந்துள்ளது. இவை இனப்பிரச்சினை முழு அளவினதான ஒரு சர்வதேச பரிணாமத்தை எட்டும்கட்டத்தை அடைந்துள்ளதை காட்டுவனவாகும்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ இவ்விவகாரத்தை [illegible]

# காமினிக்கு அமைச்சர் பதவி மன்சூர் பதவி விலகுவார்?

## ரஷ்ய தூதுவர் நியமனம் கிடைக்கலாம்

(கொழும்பு)

ஐ. ஜ. தே. மு. தலைவரான காமினி திஸ்ஸநாயக்காவை ஐக்கிய தேசியக்கட்சியினுள் சேர்ப்பதற்கு வசதியளிக்கும் முகமாக வர்த்தக வாணிபத்துறையமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தனது பதவியை துறப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் மன்சூர் தாம் ஐந்து வருடச் சேவையை பூர்த்தி செய்து விட்டமையினால் ஓய்வுபெற விரும்புவதாகவும் இதனால் தாம் அமைச்சரவையிலிருந்து விலக விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார் இதேவேளை தற்போது ரஷ்யாவிற்கான சிறிலங்கா தூதுவராக இருக்கும் நிசங்கா விஜேவர்த்தனாவின் பதவிக் காலம் முடிவடைவதால் மன்சூர் புதிய ரஷ்ய தூதுவராக நியமிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக மற்றுமொரு செய்தி தெரிவிக்கின்றது.

கிராமிய உல்லாசப்பயணத் துறை அமைச்சர் தொண்டமானும் ஐந்து வருடங்களிற்கு மேற்பட்ட சேவையை பூர்த்தி செய்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## காமினியை சேர்த்துகொள்ள ஜனாதிபதி பிடிவாதம்

'பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவேன்' என்னும் பயமுறுத்தலுடன் திரு. டி. பி. விஜேதுங்கா தனதுபதவியைப் பாதுகாத்து வருவதாகவும் காமினிதிசநாயக்காவை தனது கட்சியில் இணைக்கும் யோசனையை விரைவில் நிறைவேற்ற இருப்பதாகவும் ஜனாதிபதி மாளிகையிலிருந்து தெரிய வருவதாகவும் கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

காமினி திசநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியை அரசுடன் சேர்க்கவேண்டுமெனவும் அதை எதிர்த்தால் தான் பாராளுமன்றத்தைக் கலைத்து அவசரத் தேர்தலொன்றை நடத்தப் போவதாக அண்மையில் பாராளுமன்றக் கூட்டத்தில் கூறியிருந்தார். தான் எடுக்கும் இந்த முடிவை எதிர்த்துப் பகிரங்கமாகக் கூறவோ அல்லது எவ்வழியிலேனும் வெளிப்படுத்தவோ கூடாதெனவும் ஜனாதிபதி கூறியதாகத் தெரியவருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பார்த்துக்கொண்டிருக்கும் போது நுவரெலியாக் கூட்டமொன்றில் அமைச்சர் ரேணுகா ஹேரத்தும் மத்திய மாகாண முதலமைச்சர் டபிள்யூ.எம்.பி திசநாயக்காவும் காமினி திசநாயகாவை ஐ.தே. கட்சியில் எடுப்பது பற்றிக்கூறியிருந்ததை ஜனாதிபதி கண்டித்துள்ளார். அதன் பின்னர் ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவர்கள் இத்தகைய கூற்றுக்கள் கூறுவதை நிறுத்திக்கொண்டனர்.

காமினி அவர்களை அரசில் சேர்த்துக் கொண்டால் தான் அரசைவிட்டு வெளியேறப் போவதாகப்பயமுறுத்திய ரணிலும் ஜனாதிபதியின் இப்பயமுறுத்தலினால் அமைதியாக இருப்பதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# வில்பத்து காடுகளில் யானை விரட்டல் நிறுத்தம்

(கொழும்பு)

வில்பத்துக்காடுகளில் சுமார் 500க்கும் அதிகமான புலிகள் பதுங்கியிருக்கிறார்கள் என்ற தகவல் ஒன்றை அடுத்து, வில்பத்துவில் வனபரிபாலன திணைக்களம் மேற்கொண்ட யானைகளை விரட்டும் பணி கைவிடப்பட்டது. வில்பத்துக் காட்டை அடுத்த கிராமங்களில் யானைகள் கிராமவாசிகளை அடித்துக் கொன்றதாலேயே யானைகளை விரட்டும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சுமார் 40 வனபரிபாலன திணைக்கள ஊழியர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் மேல் வில்பத்துக் காடுகளில் இருக்கும் புலிகள் தாக்கக் கூடும் என்று அஞ்சி வில்பத்து எல்லைப்பகுதிகளில் கடமையில் ஈடுபடும் ஊழியர்களுக்கு இராணுவம் பாதுகாப்பு வழங்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இது குறித்துஇன்னும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையாம்.

# சவுதியிலிருந்து வந்தவர் கொழும்பில் கைது

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மூன்று வருடங்கள் தொழில் பார்த்து விட்டு விடுமுறையில் கொழும்பு திரும்பிய போது கைது செய்யப்பட்டு கடந்தஒன்றரை மாதங்களாக புறக்கோட்டை பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஸ் மகாதேவனை விடுதலை செய்யுமாறு அவரது தாயாரான திருமதி பவளக்கொடி சுந்தரமூர்த்தி என்பவர் கொழும்பு மதிசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரை கேட்டுள்ளார்.

1990 மேயில் சவுதி அரேபியா சென்ற மகாதேவன் (26) 1993 ஜூன் விடுமுறைக்கு இலங்கை வந்தபோது புறக்கோட்டை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். எனினும் இவர் ஜூன் 22ஆம் திகதியளவில் கொழும்பு நீதிபதி முன்னிலையில் விடுவிக்கப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட இவரை உடனடியாகவே புறக்கோட்டை பொலிஸார் கைதுசெய்து தொடர்ந்து தடுத்துவைத்துள்ளனர். இதனால் இவர் தற்போது மீண்டும் தொழிலைத் தொடரசவுதிதிரும்பமுடியாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# தோட்டங்கள் தனியார்மயம்; நன்மை எதுவும் இல்லை

## செல்லச்சாமி தெரிவிப்பு

தோட்டங்கள் தனியார் நிருவாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு சுமார் ஒரு வருட காலமாகி விட்டது. ஆனாலும் தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில் திருப்திகரமான அபிவிருத்தி எதுவும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை. இதனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மாற்று நடவடிக்கையில் இறங்கவேண்டிய நிலை வரும் என கைத்தொழில் ராஜாங்க அமைச்சரும் இ. தொ. கா. பொதுச்செயலாளருமான எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; பல எதிர்பார்ப்புகளுடனும், நிபந்தனைகளுடனும் தோட்ட நிர்வாகம் தனியாருக்குக் கையளிக்கப்பட்டன ஆனால் திருப்தியான முறையில் நிர்வாகங்கள் நடைபெறாத படியினால் தொழிலாளர்கள் அதிருப்தி அடைந்து ஆத்திரமடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதை கடந்த ஒருவருட காலத்தில் அவதானித்து வருகின்றோம்.

இந் நிலை நீடிக்குமானால் இ. தொ. கா. தொழிலாளர் நன்மை கருதி மாற்றுநடவடிக்கையில் இறங்கவேண்டியநிலை ஏற்படும்

உற்பத்தியைப் பெருக்குதல், அதிகளவு தொழில். வாய்ப்புகளை ஏற்படுத்துதல், புறம்போக்கு நிலத்தை விளை நிலமாக்குதல் போன்றவற்றிற்காகவே தோட்ட நிர்வாகங்கள் தனியார் வசம் கையளிக்கப்பட்டன. ஆனால் எதிர் பார்த்த அளவு எதுவும் நடைபெறாத நிலை உருவாகியுள்ளது.

தனியாரிடம் நிர்வாகம் கையளிக்கப்பட்டாலும் இறுதியான அதிகாரம் பெருந்தோட்ட அமைச்சிடமும் தொழில் அமைச்சிடமுமே உள்ளன என்றார்.

# திருமலையில் உள்ள தமது முகாமிற்கு புலிகளின் பிரிவுகள் நகர்வாம்

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள புலிகளின் பிரதான முகாமுக்கு விடுதலைப்புலிகள் தமது படைகளை நகர்த்தியுள்ளார்கள் என்றும், அவர்கள் கிழக்கு மாகாண எல்லைகளில் உள்ள பாதுகாப்புப் படை முகாம்களைத் தாக்கக் கூடும் என்றும் புலனாய்வு அறிக்கையை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது. புலிகளின் பிரதான முகாமை 'அங்கொட வில்லுவ முகாம்' என்றும் புலனாய்வுப்பிரிவு தெரிவிக்கின்றது.

புலிகளின் றேடியோத் தொடர்பை ஒற்றுக் கேட்டதன் மூலம் புலிகளின் இந்த நகர்வு பற்றித் தமக்குத் தகவல் எட்டியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கிழக்கு எல்லைக் கிராமங்களில் உள்ள இராணுவ முகாம்கள்மீது தாக்குதல் மேற்கொள்ளும் நோக்கத்துடனேயே புலிகள் தமது முகாமைப் பலப்படுத்துவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல் சில மாதங்களுக்கு முன்னர் தமது 'அங்கொட வில்லுவ' முகாமைப் பலப்படுத்திய புலிகள், ஜனகபுர இராணுவ முகாம்மீது படையெடுத்து அழித்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பதாக ஐலண்ட் கூறுகிறது.

கிழக்கு எல்லையிலுள்ள இராணுவ அணிகள் பலப்படுத்தப்பட்டுத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது புலிகளின் தாக்குதலைச் சமாளிக்க இராணுவம் எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி மேலதிக தகவல்களை வெளியிட இராணுவத்தினர் மறுத்துவிட்டார்களாம்.

காடுகளில் பதுங்கியிருக்கும் புலிகள் ஒரேநேரத்தில் கல்முனை, மட்டக்களப்பு, அம்பாறை மீது தாக்குதல் மேற்கொள்ளலாம் என்ற தகவலை அடுத்து இந்தப் பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பிறப்பு அத்தாட்சி பத்திரம் வழங்கல்

[வடமாராட்சி]

பருத்தித்துறை மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 1954 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்கட்கு ஆளுக்கொரு பிறப்பு பிரதி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வலுவலகத்திற்கு சிறுதொகை பிறப்பு சான்றிதழ் படிவங்கள் கிடைத்துள்ளமையினால் அத்தியாவசிய தேவை உள்ளவர்களுக்கு மட்டுமே சான்றிதழ் வழங்கப்படுவதாகவும் தேவையானோர் உடன் விண்ணப்பிக்கலாமெனவும் மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு கே. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார். (யோ)

இலங்கையில் இடம் பெற்றுவரும் உள்நாட்டுப் போரிலும் இன ஒடுக்கல் நடவடிக்கையிலும் இன்று உலகின் கவனம் பெருமளவு திரும்பியுள்ளது. இந்தவகையில் இன்று உலகில் இடம் பெற்று வரும் சிக்கல் நிறைந்த பொஸ்னியா, சோமாலியா பிரச்சினைகள் வரிசையில் இலங்கை இனப்பிரச்சினையும் இடம் பெறும் கட்டத்தை எட்டியுள்ளது எனக் கூறலாம். இதனால் இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட்டாக வேண்டும் என்ற நிலை உலக அரங்கில் முனைப்பு பெற்றுவருகின்றது.

இதன் காரணமாகத்தான் இனப்பிரச்சினையில் ஐ.நா.சபை தலையீடு பற்றிய பேச்சும் பல தரப்பில் இருந்தும் எழுப்பப்பட்டு வருகின்றது. ஐ.நா. சபையின் உப குழுக்களில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் பிரஸ்தாபிக்கப்படும் நிலை அடைந்துள்ளது. இவை இனப்பிரச்சினை முழு அளவினதான ஒரு சர்வதேச பரிணாமத்தை எட்டும்கட்டத்தை அடைந்துள்ளதை காட்டுவனவாகும்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கமோ இவ்விவகாரத்தை ஒரு உள்நாட்டுப்பிரச்சினை என்றும் இது இலங்கைக்குரிய தனிப்பட்ட பிரச்சினை என்பதோடு இது இனப்பிரச்சினை அல்ல; ஒரு 'பயங்கரவாதப் பிரச்சினை' எனவும் சாதிக்க முற்படுகின்றது. இதன் மூலம், அரசிற்கெதிராக எழுந்து வரும் குற்றச்சாட்டுக்களையும், அழுத்தங்களையும் குறைத்து விடலாம் என்பதோடு, திசைதிருப்பிவிடவும் முற்படுகின்றது.

இத்திசை திருப்புத்திட்டத்தின் ஒரு அங்கமாக இவ் உள்ளூராட்சித் தேர்தலை சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது. இவ் உள்ளூராட்சித் தேர்தலின் மூலம், இனப்பிரச்சினையின் தளமாக உள்ள ஒரு பகுதி தனது பூரண கட்டுப்பாட்டில் உள்ளதெனக் காட்டுவதோடு, அங்குள்ள மக்கள் 'ஜனநாயக முறைப்படி' தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது எனவும் உலகிற்கு காட்ட அரசாங்கம் முற்படுகின்றதெனலாம். இதன் மூலம் இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்பதை வற்புறுத்தவும் முனையலாம்.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் இவ் உள்ளூராட்சித்தேர்தலை ஆயுத முனையில் நடத்தி முடிக்கக் கூடியவாய்ப்பும் உண்டு. கொந்தளிக்கும் அரசியல் நிலையிலும் 1988 இல் ஜனாதிபதி தேர்தலை தென்னிலங்கையில்நடத்தி நேரடி அனுபவமும், வடக்கு-கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை இந்திய இராணுவம் நடத்திய போது பார்வையாளராகக் கண்காணித்துக் கொண்டிருந்த அனுபவமும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தேர்தலை நடத்த உதவக் கூடும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலமோ அன்றி பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலமோ இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என்றோ அன்றி இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது என்றோ உலகை ஏமாற்றிவிடமுடியாது. ஏனெனில், இலங்கையில் இன ஒடுக்குமுறை நிகழ்கின்றதென்பதை உலகம் இன்று ஏற்றுக்கொண்டு விட்டது.

மேலும் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்படவில்லை என்பதும், தோற்கடிக்க முடியாதது என்பதும் இலங்கையில் இனப்பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினை அல்ல என்பதை வெளிக்காட்டப் போதுமானதாகும்,

---

# திருமலையில் உள்ள தமது முகாமிற்கு புலிகளின் பிரிவுகள் நகர்வாம்

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள புலிகளின் பிரதான முகாமுக்கு விடுதலைப்புலிகள் தமது படைகளை நகர்த்தியுள்ளார்கள் என்றும், அவர்கள் கிழக்கு மாகாண எல்லைகளில் உள்ள பாதுகாப்புப் படை முகாம்களைத் தாக்கக் கூடும் என்றும் புலனாய்வு அறிக்கையை மேற்கோள் காட்டி ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது. புலிகளின் பிரதான முகாமை 'அங்கொட வில்லுவ முகாம்' என்றும் புலனாய்வுப்பிரிவு தெரிவிக்கின்றது.

புலிகளின் றேடியோ தொடர்பை ஒற்றுக் கேட்டதன் மூலம் புலிகளின் இந்த நகர்வு பற்றித் தமக்குத் தகவல் எட்டியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கிழக்கு எல்லைக் கிராமங்களில் உள்ள இராணுவ முகாம்களின்மீது தாக்குதல் மேற்கொள்ளும் நோக்கத்துடனேயே புலிகள் தமது முகாமைப் பலப்படுத்துவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல் சில மாதங்களுக்கு முன்னர்தமது 'அங்கொட வில்லுவ' முகாமைப் பலப்படுத்திய புலிகள், ஜனகபுர இராணுவ முகாம்மீது படையெடுத்து அழித்ததாக இராணுவ வட்டாரங்கள்தெரிவிப்பதாக ஐலண்ட் கூறுகிறது.

கிழக்கு எல்லையிலுள்ள இராணுவ அணிகள் பலப்படுத்தப்பட்டுத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. புலிகளின் தாக்குதலைச் சமாளிக்க இராணுவம் எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி மேலதிக தகவல்களை வெளியிட இராணுவத்தினர் மறுத்துவிட்டார்களாம்.

காடுகளில் பதுங்கியிருக்கும் புலிகள் ஒரேநேரத்தில் கல்முனை, மட்டக்களப்பு, அம்பாறை மீது தாக்குதல் மேற்கொள்ளலாம் என்ற தகவலை அடுத்து இந்தப் பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவ சுற்றிவளைப்பில் மூன்று பொதுமக்கள் கைது

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியை அடிக்கடி சுற்றிவளைத்துவரும் சிறிலங்கா இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்களை கைது செய்து முகாம் கொண்டு சென்றுவருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு 7-00 மணியளவில் வாகரை 5ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாராகிய காளிக்குட்டி சதாசிவம் (40) என்ற பொதுமகனை அவரது வீட்டில்வைத்து கைதுசெய்த இராணுவத்தினர் வாகரை முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வாகரை கண்டலடிப் பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் இரண்டு அப்பாவிப் பொதுமக்களைக் கைதுசெய்து வாகரை முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையாராகிய எதிர்மனசிங்கம் (40), தாய் தந்தையரற்ற அனாதரவான யோகராசா (22) ஆகிய இரு பொதுமக்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

# கொழும்பு சுற்றிவளைப்பில் 35 தமிழ் பெண்கள் கைது

(கொழும்பு)

கொழும்பில் பொலிசார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு ஒன்றில் 35இளம் தமிழ் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பெண்கள் தாம்கொழும்பில் தங்கியிருப்பது தொடர்பாக கூறிய காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாதவை எனவும் இவர்கள்வைத்திருந்த ஆவணங்கள் போலியானவை எனவும் பொலிசார் தெரிவித்தனர். கைதான சிலபெண்கள் வல்வெட்டித்துறையைசேர்ந்தவர்கள்என்றும் கூறப்படுகிறது.

சில பெண்கள் சிங்களத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் எனவும் கொழும்பில் ஆடம்பர விடுதிகளில் தங்கியிருந்தவர்கள் எனவும் பொலிசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

---

இலிகிதர்

மேலும் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த, குறிப்பிடப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட கடிதங்களை பெற்றவர்கள், வவுனியாவுக்கு நேர்முகப்பரீட்சைக்கு செல்ல முடியாதிருப்பவர்கள் தம்முடன் தொடர்புகொள்ளும்படி மாவட்ட பிரதி ஆணையாளர் கேட்டுள்ளார்.

---

## தொடரும் தேடுதல்

திருக்கோணமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகரை அண்டிய அன்புவழிபுரம், செல்வநாயகபுரம் ஆகிய பகுதிகளில் படையினரின் தீவிர தேடுதல் நடைபெற்றது

---

தமிழீழ

கிழமையன்று அபராதம் செலுத்தும்படி நீதியாளர்களினால் தீர்ப்பு வழங்கப்பட்டது இதையடுத்து நீதிமன்றம் தனது இன்றைய நடவடிக்கைகளை ஒத்தி வைத்தது. (11)

(09)

---

# எறிகணை வீச்சு

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று பகலும் இரவும் வலிமேற்கு கரையோரப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதலை நடத்தினர்.

இவ் எறிகணைகள் பொன்னாலை மூளாய் கரையோரப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாக தெரியவருகிறது.

---

நீதிமன்றச்

டுள்ளது. இலவசமாக அரச சட்டவாளர்களை தமக்காக வாதிடும்படி கோரமுடியும்.''

நீதிமன்ற நடவடிக்கைகள், புதிய தமிழீழ சட்டஅறிக்கை எனும் வடிவில் மூன்று மாதங்களுக்கொரு தடவை வெளியிடப்படும், இது நடைபெற்ற வழக்குகளின் தீர்ப்புகளை மக்களுக்கு தெரிவிக்கும் முகமாக வெளியிடப்படும்.''

''தமிழீழ நீதிமன்றங்களில் வாதாடவிரும்பும் புதிய சட்டத்தரணிகள் பற்றி கேட்டபோது மேற்படி சட்டவாளர்கள் உலகின் எப்பகுதியில் சட்டக்கல்வி பயின்றாலும் தமிழீழ சட்டப் பரீட்சையில் தோற்றி சித்திபெற்ற பின்னரே அவர் தமிழீழ நீதிமன்றங்களில் வாதாடமுடியும்.''

தேசவிரோத செயல்கள், பற்றிக் கேட்டபோது ''தேசவிரோதச் செயல்கள் தமிழீழ நீதிமன்றங்களுக்கு அப்பாற்பட்டதாகும். இதற்கான விசாரணைகள் தமிழீழ விடுதலைப் புலிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும். விடுதலைப் புலிகள் உறுப்பினர்களோ காவல் துறையினரோ குற்றமிழைக்கும் பட்சத்தில் அது பற்றிய விபரங்கள் தேசியத் தலைவருக்கு அனுப்பப்படும். குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் சாதாரண தண்டனையிலும் மிகக் கடுமையானதண்டனைகள் வழங்கப்படும்'' என தெரிவித்தார்.

சட்டங்களில் மாற்றங்கள் செய்யப்படுமா எனக் கேட்டபோது, சட்டங்களில் காலத்தின் தேவைகருதி மாற்றங்கள் உருவாக்கப்படலாம். எனத் தெரிவித்தார்.

யூரிகள் சபைபற்றி அவர் குறிப்பிடுகையில்; நீதிமன்ற நடவடிக்கைகளில் யூரிகள் சபையும் இடம்பெறும் யூரி சபையில் வழமைபோல் வைத்திய நிபுணர் ஒருவர் நில அளவையாளர் ஒருவர் பொறியியலாளர் என தகையுடையோர் நியமிக்கப்படுவர். ஆயினும் யூரிகளுக்கு நீதிமன்றினால் கட்டணம் செலுத்தப்படமாட்டாது வழக்காளர் கோரும் பட்சத்தில் விசேடமாக யூரிஒருவரின் தேவை ஏற்படின் கட்டணம் வழக்காளரால் நீதிமன்றுக்கு செலுத்தப்பட வேண்டும்என தெரிவித்தார்.

நீதியாளரின் இருக்கைகள் பற்றி விசேடமாகக் குறிப்பிட்ட திரு. பரா அவர்கள் ''நீதியாளர்களின் இருக்கைகள் வழமைபோல் மிக உயர்ந்த இடத்தில் இருக்க மாட்டாது. சாதாரண உயரத்தில் மக்கள் இருக்கைகளுக்கு சமனாகவே நீதியாளர்களின்இருக்கைகள் இருக்குமெனவும் மக்களோடு நீதியாளர்களின் நேரடியாக உரையாடும் தன்மையை வெளிக்காட்டும்வகையிலேயே இவ் அமைப்பு அமைந்துள்ளது எனவும் அவர் கூறினார். (11),(09)

---

இந் நிலை நீடிக்குமானால் இ.தொ.கா. தொழிலாளர் நன்மை கருதி மாற்றுநடவடிக்கையில் இறங்கவேண்டியநிலை ஏற்படும்

உற்பத்தியைப் பெருக்குதல், அதிகளவு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துதல், புறம்போக்கு நிலத்தை விளை நிலமாக்குதல் போன்றவற்றிற்காகவே தோட்ட நிர்வாகங்கள் தனியார் வசம் கையளிக்கப்பட்டன. ஆனால் எதிர்பார்த்த அளவு எதுவும் நடைபெறாத நிலை உருவாகியுள்ளது.

தனியாரிடம் நிர்வாகம் கையளிக்கப்பட்டாலும் இறுதியான அதிகாரம் பெருந்தோட்ட அமைச்சிடமும் தொழில்அமைச்சிடமுமே உள்ளன என்றார்.

# ஆகஸ்ட் நிவாரணம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கான ஆகஸ்ட் மாதத்திற்கான இலவச நிவாரணம் இரண்டு, இரண்டு கிழமைகளாக வழங்க யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது.

இந் நிவாரண விநியோகத்திற்கான பொருள்கள் யாவும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினால் சகல பல நோ. கூ. சங்கங்களிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேற்படி அனுமதிக்கப்பட்ட பொருள்களுள் அரிசி, மா, சீனி, பருப்பு, கைலண்ட் பால்மா, லிற்றாமில்க் பால்மா என்பன அடங்குகின்றன.

முதல் இரண்டு வாரங்களிற்குமான நிவாரண விநியோகம் அடுத்த கிழமை நாட்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது (பா)

---

## பிறப்பு அத்தாட்சி பத்திரம் வழங்கல்

[வடமராட்சி]

பருத்தித்துறை மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 1954 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்கட்கு ஆளுக்கொரு பிறப்பு பிரதி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வலுவலகத்திற்கு சிறு தொகை பிறப்பு சான்றிதழ் படிவங்கள் கிடைத்துள்ளமையினால் அத்தியாவசிய தேவை உள்ளவர்களுக்கு மட்டுமே சான்றிதழ் வழங்கப்படுவதாகவும் தேவையானோர் உடன் விண்ணப்பிக்கலாமெனவும் மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு கே. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார். (யோ)

# 100 பெண்கள் காயம்

ஐக்கிய அரபு ராச்சியத்திலுள்ள சாஜாவில் பெயின்ற் நிறுவனமொன்றில் இடம் பெற்ற தீ விபத்தினால் பலர் காயமடைந்துள்ளனர். இவர்களில் அநேகர் இலங்கையைச் சேர்ந்த பெண்கள் என தெரிவிக்கப்படுகிறது

மேற்படி பெயின்ற் நிறுவனத்தில் பிடித்துக் கொண்ட தீ அருகிலுள்ள விடுதிகளுக்கும் பரவியதாகவும், விடுதிஒன்றில் இருந்த 100க்கும் அதிகமான இலங்கைப் பெண்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. தீ பிடித்ததற்கான காரணம் தெரியவரவில்லை.

---

வெடிவிபத்தில்

[பழனி அப்பா செல்வகுமார் கோணாவில், கிளிநொச்சி]

ஆகிய எட்டுப் போராளிகளே இவ் வெடிவிபத்தில் வீரச்சாவு அடைந்தவர்களாவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# தொலைத்தொடர்புஉபகரணங்களை கடத்தமுயன்ற கடற்படை அதிகாரி

## வடபகுதி கடற்படைத் தளபதி உடந்தை

வடபகுதிதீவுகளில் பொருத்தப்பட்டிருந்த வானொலி தொலை தொடர்பு உபகரணங்கள் இரண்டை கடற்படை உயர் அதிகாரி ஒருவர் இரகசியமாக வியாங்கொடையில் உள்ள தனது வீட்டிற்கு எடுத்துச்செல்ல எடுத்த முயற்சி ஒன்று அம்பலமாகியுள்ளது. இவரின் இந்த முயற்சி இராணுவ புலனாய்வாளர்களினால் முறியடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: கொருசாய் எப். எக்ஸ் 1160 ரகத்தைச் சேர்ந்த ரெலிகொம் நிறுவனத்தின் 10லட்சம் ரூபா பெறுமதியான இந்த தொலைத்தொடர்பு உபகரணங்களையும் இரு ஜெனரேட்டர்களையும் கடற்படையினர் தீவுப்பகுதிகளிலிருந்து அகற்றி திருமலையில் உள்ள தமது களஞ்சியத்திற்கு பாதுகாப்பின் பொருட்டு அனுப்பி வைத்தனர்.

வடபகுதி கடற்படை தளபதி சந்தகிரி உதவியுடனும் ரெலிகொம் அதிகாரிகளுடன் கொண்டிருந்த நட்பினாலும் கடற்படை உயரதிகாரியொருவர் மேற்படி இரு வானொலி தொலைத்தொடர்பு கருவிகளையும் ஜெனரேட்டரையும் களஞ்சியத்திலிருந்து அகற்றினார் பின்னர் இவற்றை வியாங்கொடையில் உள்ள தமது வீட்டிற்கு எடுத்து வரும்படியும் அந்த உயர் அதிகாரி கேட்டுக்கொண்டாராம்.

இத் தகவல் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்ததையடுத்து இம்முயற்சி முறியடிக்கப்பட்டது.

இது தொடர்பாக இராணுவ புலனாய்வுப்பிரிவினர் தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. பல தொலைத்தொடர்பு நிலைகளுடன் தொடர்புகொள்ளக் கூடிய இந்த உபகரணங்களை மேற்படி கடற்படை உயரதிகாரி தமது வீட்டிற்கு எடுத்துச் செல்ல ஏன் முயற்சித்தார் என்பது குறித்து விசாரணைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதனிடையே தொடர்புக் கருவிகள் கையாடல் குறித்த தகவல்களை முதலில் வெளியிட்ட அதிகாரிகளுக்கு கொலை பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரவணக்க கூட்டம்

தென்மராட்சி கோட்டம் கொடிகாமம் வட்டத்தில் 7ஆம் 8ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்தவர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

---

**ஐ. நா. உபகுழு**

வாக்கெடுப்பு நேற்று முன்தினம் இடம்பெறவிருந்ததும் தெரிந்ததே

எனினும் இறுதிநேரத்தில் இது குறித்து ஆராய்வது கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

## மேலும் ஓர் இழுவைப் படகு பருத்தித்துறைக்கு வந்தது

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்குதுறைக்கு காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து 'றுகுணு' கப்பல் மூலம் நேற்று ஓர் இழுவைப் படகு எடுத்து வரப்பட்டது.

இத்துறைமுகத்தில் நல்ல நிலையில் போதிய இழுவைப் படகுகள் இல்லாததினால் தொழிலாளிகள் ஆபத்துக்களில் சிக்க நேரிடுவதோடு பொருள்கள் இறக்கும் வேலைகளும் பாதிப்படைந்து வருகின்றன.

தற்போது இவ் இறங்குதுறையில் ஐந்து இழுவைப் படகுகள் சேவையிலீடுபடுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒரே ஒரு படகு மட்டும் நல்ல நிலையில் உள்ளது. மற்றைய நான்கு இழுவைப் படகுகளும் பாரிய துவாரங்களைக் கொண்டனவாக உள்ளன.

துவாரங்கள் கொண்ட இழுவைப் படகுகள் நீரிறைக்கும் இயந்திரங்களின் உதவியுடனேயே பொருள்களை இறக்க பயன்படுத்தும் அவலநிலை காணப்படுகிறது. (யோ)

## விளையாட்டு

தும்பளை மேற்கு போருட்பாலர் பாடசாலை முதலாம் ஆண்டு விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும். யோ)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 21-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10650

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்!

26-9626, 24-1983, 28-6640, 24-6533 24 9549
43-2524, 41-9659, 24-5774, 27 1531, 26-8746
41-1227, 27-5482, 41-6417, 26-1461, 24-0415
42-1464 40-2829, 26-7307, 42-2151.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

40-1516, 26-1669, 26-1583, 41-8467, 42-7312.


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

**'Wild Geese'**

'வைல்ட் கீஸ்'

[தமிழ் விளக்கம்]

சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-714)



## பதவி வெற்றிடம்

கிளிநொச்சியில்
இயங்கிக் கொண்டிருக்கும்
அச்சகத்திற்கு

கணக்குப் பதியுனர் (*BOOK KEEPER*)
தேவை

உரிய தகைமைச் சான்றிதழ்களுடனும், வேலை அனுபவச் சான்றிதழ்களுடனும் 25-08-1993 புதன் கிழமை காலை 10.00 மணிக்கு ஈழநாதம் பணிமனைக்கு நேரில் சமுகம் தரவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்,
தங்குமிடவசதியும், சாப்பாடும் ஒழுங்கு செய்து


## ஆனையிறவு வெடி விபத்தில் 8 வேங்கைகள் வீரச்சாவு



கப்டன் வண்ணன்




லெப். தமிழேந்தி (இராஜன்)



2-ம் லெப். அருள்வாசன் (முகிலன்)



20-08-93அன்று ஆனையிறவுப் பகுதியில் தவறுதலாக இடம்பெற்ற வெடி விபத்தொன்றில் எட்டுப் போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்



## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
28-5-1975



வீரச்சாவு:
22-8-1990

**பாபுஜீ**

(ஐயாத்துரை அருள்செல்வன்)
சந்தையடி, காங்கேசன்துறை

பிறக்கும் மனிதன் இறக்கிறான்
அது இயற்கையே ஆனால்
நீங்கள் மட்டும் இறக்காமல்
ஒவ்வொரு மக்கள் மனதிலும்
வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் ஆம்
சாதனை ஏந்தி சரித்திரம படைத்தவர்கள்
சாகா வரம் பெற்ற ஈழத்து தேவர்கள்
ஈழத்து இருளைக் கிழித்து வந்த நிலவுகள்
ஈழத்தின் விடியலுக்காய் ஆன ஜோதிகள்
நிச்சயம் உங்கள் ஒளியில்
சுதந்திர ஈழம் மலரும்.
அதுவரை உங்கள் நினைவுடன்!

- குடும்பத்தினர்.

மேஜர் சோதியா வீதி,
உடுவில். (5731)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

# பதவி வெற்றிடம்

கிளிநொச்சியில்
இயங்கிக் கொண்டிருக்கும்
அச்சகத்திற்கு

**கணக்குப் பதியுனர் (*BOOK KEEPER*)**
தேவை

உரிய தகைமைச் சான்றிதழ்களுடனும், வேலை அனுபவச் சான்றிதழ்களுடனும் 25-08-1993 புதன் கிழமை காலை 10.00 மணிக்கு ஈழநாதம் பணிமனைக்கு நேரில் சமுகம் தரவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தங்குமிடவசதியும், சாப்பாடும் ஒழுங்கு செய்து தரப்படும்

**ஈழநாதம்**
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(இ)

## பதவி வெற்றிடம்

கணக்குப் பதிவாளர் 301. 8
சம்பளத்திட்டம்:- 1045–40x4–50x10–1705
(கூட்டுறவு ஊழியர்களுக்கான இதரபடிகளும்)
வயது:- 18–40
கல்வித்தகைமை:-

(அ) கூட்டுறவு பணியாளர் 9ஆவது சம்பளத்திட்டத்தில் 3 வருட கால அனுபவம் 10ஆவது சம்பளத் திட்டத்தில் 6 வருட கால அனுபவம்

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தினால் நடாத்தப்பெற்ற கணக்குப்பதிவாளர் இறுதிப்பரீட்சையில் சித்தியுடன் 4 வருட கால மேற்பார்வை மட்ட பதவியில் அனுபவம்

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப் பயிற்சி சான்றிதழ் அல்லது க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியும், மேற்பார்வையாளர் மட்டப் பதவியில் 4 வருட அனுபவம்.

விண்ணப்பங்கள் யாவும் சொந்த கையெழுத்தில் எழுதப்பட்டு 5-9-93க்கு முன் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
வடமராட்சி தெங்கு பனம் பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.
திக்கம்,
அல்வாய்.
(3443)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


கப்டன் வண்ணன்


லெப். தமிழேந்தி (இராஜன்)


2-ம் லெப். அருள்வாசன் (முகிலன்)


2-ம்லெப். எள்ளுவன்

20-08-93அன்று ஆனையிறவுப் பகுதியில் தவறுதலாக இடம்பெற்ற வெடி விபத்தொன்றில் எட்டுப் போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.


2-ம் லெப். வீரமணி


2-ம் லெப். விநாயகன்


வீரவேங்கை தவரஞ்சன்


வீரவேங்கை சகாநாதன் (ரவிநாத்)

## தேவை

**வில்லியம் ஹவே தனியார் மருத்துவமனை**
சுண்டிக்குளி.

மேற்படி மருத்துவமனைக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. டாக்டர் (அ) முழுநேர அளவிலான வேலை M. B. B. S. தரம்.
   (ஆ) பகுதிநேர அளவிலான வேலை M. B. B. S. தரம்,
2. தாதியார் சத்திரசிகிச்சை கூடத்தில் அனுபவம்பெற்ற பெண் தாதி.

(மேற்படி விண்ணப்பங்களுக்கு ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்)

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
நிர்வாகத்தினர்
வில்லியம் ஹவே தனியார் மருத்துவமனை சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(5751)
-நிர்வாகத்தினர்.

**பாபுஜீ**
(ஐயாத்துரை அருணாசெல்வன்)
சந்தையடி, காங்கேசன்துறை

பிறக்கும் மனிதன் இறக்கிறான்
அது இயற்கையே ஆனால்
நீங்கள் மட்டும் இறக்காமல்
ஒவ்வொரு மக்கள் மனதிலும்
வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் ஆம்
சாதனை ஏந்தி சரித்திரம படைத்தவர்கள்
சாகா வரம் பெற்ற ஈழத்து தேவர்கள்
ஈழத்து இருளைக் கிழித்து வந்த நிலவுகள்
ஈழத்தின் விடியலுக்காய் ஆன ஜோதிகள்
நிச்சயம் உங்கள் ஒளியில்
சுதந்திர ஈழம் மலரும்.
அதுவரை உங்கள் நினைவுடன்!

- குடும்பத்தினர்.

மேஜர் சோதியா வீதி,
உடுவில்.
(5731)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இராசம்மா கதிரவேலுபத்தர்**

தோற்றம்: 15-06-1924
மறைவு: 01-09-1992

ஆண்டொன்று சென்றதம்மா
ஈன்று புறந்தந்த உனைபிரிந்து—ஆனாலும்
மறவோம் நாளும் உனை
மனதிருத்தி அஞ்சலிக்கின்றோம்.

சகோதரர்கள்: கந்தையா (ஆசிரியர்), பூமணி.
மக்கள்: சாரதாம்பாள், சந்தானலட்சுமி, செல்வராசா, தங்கராசா, கிருஷ்ணசாமி, கணேஸ்வரன் அப்பு
மருமக்கள்: தம்பையா, வசந்தபவானி நாகேஸ்வரி, ஜெயதேவி, விஜயலதா.
பேரப்பிள்ளைகள்: தெய்வேந்திரன், புஷ்பலதா, உஷாயினி, சஞ்சிதா, ரேணுகா, சுஜிகரன், சுஜீத்தா, சுரேஜா, சுஜீபன், ஜெயசூரியா.

முத்துமாரி அம்மன் கோவிலடி,
மட்டுவில் வடக்கு.
(5747)